DEPOSITION OF WITNESS
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**CC.No.06/2024**

Deposition of witness for Prosecution அ.சா.6

| | | |
|---|---|---|
| பெயர் | : | சூசை மைக்கேல்ராஜ் |
| தகப்பனார்/கணவர் பெயர் | : | சாமிக்கண்ணு |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |
| தொழில் | : | |
| வயது | : | |

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 21.07.2026

எதிரிகள் ஆஜர் இல்லை. அவர்களைப்பொறுத்து குவிமுச பிரிவு 317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது கல்லல் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 05.11.2023 ம் தேதி வேலாயுதப்பட்டிணம் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்தபோது சதீஸ்குமார் கொடுத்த புகார் மனுவை பெற்று குற்ற எண்.43/2023, இதச பிரிவுகள் 294(பி),506(1) ஆக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். (**மேற்படி முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) பின்னர் சம்பவ இடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தேன். (**மேற்படி மாதிரி வரைபடம் மற்றும்**

**பார்வை மகஜர் முறையே அ.சா.ஆ.3 மற்றும் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 9 நபர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் எதிரியை தேடியபோது எதிரி மாண்புமிகு சிவகங்கை முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் முன்பிணை பெற்று சமூகம் நீதிமன்றத்தில் சரண் அடைந்து விட்டார். பின்னர் வழக்கின் புலன்விசாரணையை முடித்து எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

2ம் எதிரியை நீக்கிவிட்டு 1ம் எதிரிக்கு எதிராகதான் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். 2ம் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்பதால்தான் அவரை நீக்கி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். 46 நாட்கள் காலதாமதமாகதான் முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை காலம் 8ல் காலதாமதத்திற்கான காரணம் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் 19.09.2023ம் தேதி இரவு 20.23 மணி சம்பவ நேரம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகாரில் சம்பவ நேரம் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை காலம் 8ல் சம்பவ நேரம் இரவு 8.23 என்றும் காலம் 12ல் சம்பவ நேரம் மதியம் 2.00 மணி என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1ம் எதிரி சிங்கப்பூர் எண்ணில் இருந்து புகார்தாரரை தொடர்பு கொண்டு பேசுவதற்கு வாய்ப்பில்லை என்றால் தெரியாது. வாட்சப்காலில் பேசினார்களா அல்லது சாதாரண தொலைபேசி அழைப்பில் பேசினார்களா என்று தெரியாது என்றால் சரிதான். அவ்வாறு தொடர்பு கொண்டு பேசியதற்கான எதிரி

மற்றும் புகார்தாரர் ஆகிய இருவரின் CDR மற்றும் தொலைபேசி அழைப்புகளின் விபரங்கள் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். எதிரிகள் அவ்வாறு பேசியதற்கான பதிவுகளை புகார்தாரர் என்னிடம் காண்பிக்கவில்லை என்றும் நான் அதை கேட்டு பெறவில்லை என்றால் சரிதான். புகார்தாரரின் மனைவி விவாகரத்து கோரி வழக்கு தாக்கல் செய்த விபரம் தெரியும். அவ்வாறு வழக்கு தாக்கல் செய்ததால் 1ம் எதிரி மீது இருந்த கோபத்தினால் 1ம் எதிரி மீது கொடுக்கப்பட்ட பொய் புகார் என்றால் சரியல்ல. சாட்சிகளை காவல் நிலையத்திற்கு வரவழைத்து உற்பத்தி செய்தேன் என்றும் சரியாக புலன்விசாரணை செய்யாமல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை: இல்லை**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

S/d..D.Poornima, B.A.,B.L(Hons).,L.L.M.,
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.